விலை ரூபா 1:25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 21 ஸபர் 2 இதழ் 239
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7-10-1986

# அ. தி. மு. க. உயர்மட்ட அமைப்பில் பெருமாற்றம்

## எம். ஜி. ஆர். பொதுச்செயலாளராக பதவியேற்பு

சென்னை, ஒக் 6

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஆளும்கட்சியான அனைத்திந்தி அண்ணு திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளராகவும் சுகாதார அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே துணைப் பொதுச் செயலாளராகவும் இன்று முதல் பதவி ஏற்றுள்ளனர்.

சென்னையில் இன்று அவசரமாக கூடிய கட்சியின் செயற்குழு கூட்டத்திலேயேகட்சியின் உயர்மட்ட நிர்வாக அமைப்பில் பொது மாற்றமுடிவுகள் எடுக்கப்பட்டன.

அ தி மு. க. வின் நிறுவன தலைவரான முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் 1972ல் கட்சியின் முதலாவது பொதுச் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார்

1984ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இருந்து கட்சியின் பொதுச் செயளாளராக இருந்துவந்த முன்னுள் அமைச்சர் தரு எஸ். இராகவானந்தமும் துணைப் பொதுச் செயலாளராக இருந்த திரு. எஸ் ஆர் ராதாவும் தமது பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அண்ணு தி மு. க.வின் மேல்

[5ம பக்கம் பார்க்க]

# "1987லிருந்து தனித்துவமான பண நோட்டுக்களை தமிழ் மக்களின் பாவனைக்குவிட ஏற்பாடு"

## விடுதலைப் புலிகள் தகவல்

யாழ்ப்பாணம், செவ்.

**தமிழீழத்துக்கான பணநோட்டுக்கள் 1987 ம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களின் புழக்கத்துக்கு விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு அறிவித்துள்ளது**

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"சுதந்திர தமிழீழத்திற்கான போராட்டம் முனைப்பாக முன்னேறிக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் எமது மக்களைப் பாதிக்கின்ற சகல விதமான அம்சங்களாலும் நமது கவனத்தைச் செலுத்தவேண்டிய கடமைப்பாட்டை நாம் கொண்டிருக்கிறோம்.

இராணுவ ரீதயான வெற்றி

[5-ம பக்கம் பார்க்க]

## துப்பாக்கிச்சூடு

(வவனியா நிருபர்)

வவனியா தச்சன்குளப்பகுதி ஈரப்பெரியகுளம் பகுதிகளில் நேர்று பிற்பகல் ஹெலிகாப்டரிலிருந்து நீண்டநேரம் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொளளப்பட்டது. (மா)

# "என்னிடம் ஆயுதம் இல்லையென்று கூறியும் தொடர்ந்து சுட்டனர்"

## கடற்படையினரிடமிருந்து தப்பிச்சென்ற நோர்வே பத்திரிகையாளர்

சென்னை, அக். 6

இலங்கைத் தமிழர்களின் நிலைபற்றி நேரில் கண்டறிய தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் அறுவருடன் கடந்த மாதம் வேதாரணியத்திலிருந்து படகில் புறப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்து கடலில் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலிலிருந்து உயிர்பிழைத்து மீண்டும் இந்தியா சென்ற நோர்வே நாட்டுப் பத்திரிகையாளர் பால் ரெப்ஸ்டால் தனது பயங்கர அனுபவத்தை வெளியிட்டுள்ளார். அவர் தனது அனுபவத்தை கீழ் கண்டவாறு கூறியுள்ளார்.

"நாங்கள் எல்லாமாக 7 பேர் கடலில் சென்றுகொண்டிருந்தோம் எங்களைத் தாக்

[5-ம் பக்கம் பார்க்க]

## அரச பயங்கரவாதத்தை கண்டித்து ஊர்வலம்

யாழ்ப்பாணம், செவ்

மட்டக்களப்பு, படுவான்கரையில் நடத்தப்பட்ட இராணுவ அடாவடித்தனங்கள், கைது செய்யப்பட்ட மலையக இளைஞர்கள் விடுதலை செய்யப்படாமை விசாரணையின்றித் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து சிறையில் வைக்கப்பட்டுள்ளமை. திருமலையில்

[5-ம் பக்கம் பார்க்க]

## ரமேஷின் விடுதலைகோரி ஊர்வலம்

யாழ்ப்பாணம், செவ்

கடத்திச் செல்லப்பட்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த ரமேஷை விடுதலை செய்யும்படி கோரி நேற்றுக்காலை உரும்பராயிலிருந்து ஊர்வலம் ஒன்று புறப்பட்டு யாழ் பல்கலைக்கழகத்தை நோக்கிச் சென்றது.

ஆண்களும் பெண்களும் உட்பட ஏராளமானோர் இவ்வூர்வலத்தில்கலந்து கொண்டனர்

ஊர்வலத்தினர் யாழ். பல்கலைக்கழகத்தை சென்றடைந்ததும், அங்கு நின்ற ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியினர் தம்மால் கடத்தப்பட்ட ரமேஷ் விடுதலை செய்யப்படுவார் என உறுதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஊர்வலத்தினர் கலைந்து சென்

(5ம் பக்கம் பார்க்க)

## அறுவர் கைது

யாழ் - செவ்.

நயினதீவில் பத்திரிகை விற்பனையாளர் உட்பட அறுவரை அங்கு முகாமிட்டுள்ள படையினர் அழைத்துச் சென்றுள்ளனர்

நா கருணாகரமூர்த்தி, வி. ஆர். கே. இரத்தினசபாபதி. க குலசிங்கம், பூ ஜெயக்குமார், கரன், ச மதியழகன் ஆகியோரே இந்த அறுவருமாவர்.

## அரிசிமூடைகளுடன் லொறி கடத்தப்பட்டது

(வவனியா நிருபர்)

மன்னார்வீதியில் 178 அரிசி மூடைகளை ஏற்றிச் சென்ற இருலொறிகள் கடத்தப்பட்டுவளன.

முஸ்லிம் வர்த்தகர்ஒருவருக்குச் சொந்தமான இந்த இரு லொறிகளும் பூவரசங்குளத்தில் அரிசமூடைகளின்றி அனாதரவான நிலையில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. (மா)

## 61 பேர் கைது

(மூதூர் நிருபர்)

திருமலை மாவட்டத்திலுள்ள சாம்பல் தீவைச் சுற்றிவளைத்த ஆயுதப்படையினர் 61 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

மேலும் இத்தீவை அண்மித்த கடற்கரைப் பகுதியில் உள்ள சல்லிக் கிராமத்திலும் தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெறுகிறது.

ஆயுதப் படையினரின் இந்த நடவடிக்கையால் 472 குடும்பங்களைச் சேர்ந்த 1782 பேர் அகதிகளாகத் தேவாலயமொன்றில் தஞ்சம் புகுந்துள்ளனர்

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் மேற்குறிப்பிட்ட இரு கிராமங்களும் மற்றைய பகுதிகளுடன் எதுவித தொடர்பும் கொள்ளமுடியவில்லை. (மா)

## உயர் அதிகாரி ராணுவத்தால் தாக்கப்பட்டார்

[வவனியா நிருபர்]

அரசாங்க உயர் அதிகாரிஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுளளதாகப் பாதுகாப்பு உயரதிகாரிகளுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது

வவனியா-ஹொரவப்பொத்தானை வீதியில் சென்றுகொண்டிருந்த அரச உயர் அதிகாரி தபாற்பெட்டிக்கருகில் வைத்துக் கடுமையாகத் தாக்கப்பட்டாராம்.

[5ம் பக்கம் பார்க்க]

## பதவி வெற்றிடம்

### போக்குவரத்துக் காவலர் (TRAFFIC POLICE)

யாழ். மாவட்டத்தில் போக்குவரத்து, வீதி ஒழுங்குகளைக் கண்காணிக்க அனுபவம் பெற்ற போக்குவரத்துக் காவலர் பதவிக்கு தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 6-11-1986**

விண்ணப்பதாரர்கள் தமது பகுதிகளிலுள்ள புலிகளின் குரல் பெயர்ப் பலகைக்கு அண்மையிலுள்ள விமர்சனப் பெட்டிக்குள் விண்ணப்பங்களைச் சேர்ப்பிக்கவும்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

[C 5057]

# மன்னார் மாவட்டத்தில் புலிகளின் கண்ணிவெடிக்கு நான்கு படையினர் பலி

## ஜீப் வண்டி முற்றாகச் சேதம்

யாழ்ப்பாணம், செவ்

மன்னார் மாவட்டத்தில் ரோந்துசென்ற இராணுவத்தினரின் ஜீப் வண்டிமீது தமிழீழ விடுதலைப் புலிப்படையின் கெரில்லா அணியினர் நடத்திய திடீர் கண்ணிவெடித் தாக்குதலில் ஜீப்வண்டி முற்றாகச் சிதைந்ததுடன் அதில் இருந்த 4 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 12-45 மணியளவில் இக்கண்ணிவெடித்தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளதாக விடுதலைப் புலிகள் அமைப்புவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

"நேற்றுபிற்பகல் 1245மணியளவில் ஆலங்குளம் இராணுவ முகாமில இருந்து 30க்கும்மற்பட்ட இராணுவத்

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சிறிய வீட்டிலுள்ள கூரைத் தகடுகள், வங்கக்கம்பிக் கிருதிகள், யன்னல்கள், கதவுகள், நிராந்திகள், கூரைமரங்கள், றீப்பைகள், கப்புகள் மொத்தமாக உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 41, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை. (C 5020)

"புதிய சமூகக் கல்வியின் சாரம்-1" க.பொ.த. (சாதாரண) பரீட்சைக்குரியது வெளியாகியுள்ளது. விலை 22.00 12 அத்தியாயங்களின் சுருக்கம். பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (C5016]

கரந்தன் சந்தியிலிருந்து கந்தசாமி கோவிலுக்குச் செல்லும் வழியில் 200யார் தூரத்தில் வீடுகட்டவும், தோட்டம் செய்யவும் வசதியான நன்னீர் கிணறுள்ள இரண்டு தோட்டக் காணிகள் விற்பனைக்குண்டு (7பரப்பு, 10½பரப்பு) தொடர்பு கொள்ளவும்: 343, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [C-5030]

சாவகச்சேரி கல்வயலில் சகல பிரயோசனங்களும், மின்சார வசதியும் கூடிய 12½ பரப் புக்காணி உடன் விற்பனைக்குண்டு விபரம்: க. சிவசிதம்பரம் 16/7, கலட்டி அம்மன் கோவிலடி, சீனியர்லேன், யாழ்ப்பாணம். (C-5034)

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது சுத்தமானது தரமானது. சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய் [C-5042]

## தேவை

மெழுகு திரியும், அப்பளமும் தயாரிப்பதற்கு ஆண்களும், பெண்களும் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். ஸ்ரீ கிருஷ்ணமில்ஸ், 622, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [C 5033]

## வகுப்புகள்

108 Brown Road, A/L 87. பௌதீக இரசாயனம் ஆசிரியர்: சத்தீஸ். ஆரம்பம்: 8-10-86 புதன் 6-15 A M நேரம்: திங்கள், புதன் 6-15 A. M. [C4984]

88ம் ஆண்டிற்கான G.A.Q வெளிவாரி பட்டப்படிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. பல்கலைக்கழக பதிவுகளைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S. அருள்நங்கை, உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைபந்தியடி, யாழ்ப்பாணம். [A 1424]

### கண்டெடுக்கப்பட்டது

கோண்டாவில் மேற்கு உப்புமடம் சந்தி பஸ்தரிப்பு நிலையத்தில் ஓர் சைக்கிள் அனுதரவாகக் காணப்பட்டு எடுத்து சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் அருகாமையில் இருக்கும் கராச்சில் பாதுகாப்பாக விடப்பட்டிருக்கின்றது. சைக்கிள் உரிமையாளர் தகுந்த ஆதாரத்துடன் சைக்கிளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம். தொடர்பு: திரு. செல்லத்துரை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். [C-5037]

### தவறிவிட்டது

ஏழாலை மத்தி, ஏழாலை. சாம்பசிவம் இன்பநாதனுடைய அடையாள அட்டை பரந்தன் ஊடாக முல்லைத்தீவு வெலிக் கண்டலுக்கும் கண்டாவளைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். [C-5043]

### சேவை

உங்கள் இல்லத்துக்கு தேவையான சகல விதமான நவதானிய வகைகள், பால்மா வகைகள், பாடசாலை உபகரணங்கள், கோழித்தீன் மற்றும் கால்நடை உணவுகள் உங்கள் வீட்டில் இருந்தபடியே பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளவும்: M G M, 777, a K,K.S Road, Jaffna T. P. 22611 [C 5048)

### சேவை

மோட்டர், மின்விசிறி, அடுப்பு, ரான்ஸ்போமர், கிறைபிண்டர், வாசிங்மெஷின். ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன உத்தரவாதத்துடன் திருத்த றீவயின்டிங் செய்ய, Omega, Manipay Road Jaffna. [ஈழநாட்டுக்கு எதிரில்]. (C-5038)

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணமெய்திய உடுவில் டச் வீதியைச் சேர்ந்த செல்லத்துரை ஜெயவீரசிங்கம் என்பவரின் மரணச் சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்.

வழ இல. தத்துவம்/3990

செல்லத்துரை ஜெயவீரசிங்கம் கைம்பெண் சிவயோகமலர், டச் றோட்டு, உடுவில்.

மனுதார்.

மேலே இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் நாளன்று முற்பகல் 9 00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
க. நாகேந்திரம்
(C5005) பதிவாளருக்காக.

## கண்ணீர் அஞ்சலியுடன் திதி அழைப்பு



பொன்னுசாமி மாரிமுத்து
(தந்தை)
மலர்வு: 18-9-1928
உதிர்வு: 12-7-1986



தெய்வானை மாரிமுத்து
(தாய்)
மலர்வு: 16-8-1933
உதிர்வு: 7-9-1986

திதி: 7-10-1986

எம் அன்புத் தெய்வங்களே எங்களை எல்லாம் விட்டுப் பிரிந்து பல நாட்களானாலும் எமது இதயங்களில் என்றும் சுடர்விளக்காய் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

பாசத்தோடும் நேசத்தோடும் எங்களைப் பெற்று வளர்த்தெடுத்த பெற்றோர்களே உங்களது ஆத்மசாந்திக்காக எந்நேரமும் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது பெற்றோர்களின் மரணச் சடங்குகளின்போது எமக்கு வந்து இன்னோரன்ன வழிகளில் உதவிசெய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளையில் 7-10-86 இன்று எமது பெற்றோர்களின் திதிச்சடங்கிற்கு அனைவரையும் வருகை தந்து அன்னார்களின் ஆன்மா சாந்திக்காக பிரார்த்தித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆனந்தன், சுந்தர், தேவராணி, மனோன்மணி, மல்லிகா, ராமகிருஷ்ணன்.

(C 5028)

## சிற்றூழியர் தாக்கப்பட்டார்

பூநகரி திங்கள்

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபையின் பூநகரி உப அலுவல சிற்றூழியர் கந்தசாமி என்பவர் கடந்த புதன்கிழமை காலை பூநகரி இராணுவ முகாமின் முன்பாக தாக்கப்பட்டார்.

மேற்படி அலுவலகத்தில் கடமையாற்றும் இச்சிற்றூழியர் வழமைபோல் வாடியடிச் சந்தையைத் துப்பரவு செய்யும்போது இராணுவ வீரர் ஒருவரால் அழைக்கப்பட்டு பூக்கள் பறித்து வரும்படி பணிக்கப்பட்டிருந்தாராம். பூக்களைப்பறித்துவர நேரம் சென்றதால் அவர் இராணுவ வீரரால் தாக்கப்பட்டதுடன், அதேசமயம் அங்கு தினமும் பாண் கொடுக்கும் ஒருவரும் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



கயிலாயபிள்ளை செல்லையா
(கனகரட்ணம்)

தோற்றம்: 09-02-1924
மறைவு: 07-09-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்புடன் வழிநடத்தி திடீரென எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்த எம் அன்புத் தெய்வமே. உங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் இறுதிக்கிரிகைகளில் கலந்தும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எம் நன்றியைத் தெரிவிக்கிறோம்

மனைவி பிள்ளைகள்.
1, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

(A 1439)

## விநியோகம்

புங்குடுதீவு திங்

1983ம் ஆண்டு முதல் 86ம் ஆண்டு வரை வன்செயல்களினால் பாதிப்படைந்தவர்களுக்கு புனர்வாழ்வு திட்டத்தினால் நிவாரணம் வழங்குவதற்கான படிவங்கள் புங்குடுதீவு மத்தி, கிழக்கு, மேற்கு ஆகிய கிராம சேகவர் பிரிவில் உள்ளவர்களுக்கு அந்தந்த கிராம சேவகர்களினால் வழங்கப்பட்டுள்ளது. (வா)

## பதவியுயர்வு

மாவிட்டபுரம், திங்.

காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரியில் 11 ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றி மாணவர்களினதும் பெற்றோர்களிலும் நன்மதிப்பைப் பெற்ற திருது சுந்தரமூர்த்தி ஐயர் கல்லூரியின் உபஅதிபராக யாழ். கல்விபபணிப்பாளரால் பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ளார். (வா)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்

காங்கேசன்துறை வட்டாரப்பாடசாலை ஆசிரியர்களுக்காக யூனியன் கல்லூரியில் இன்று 7ம் தேதி நடைபெறவிருந்த "ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு"க் கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பொ. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார்.


## பிரயாண ஒழுங்குகள்

★ லிபியா: (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
★ குவைத்: (ஆஸ்பத்திரி பெண் கிளீனேர்ஸ்)
★ குவைத்: (ஆஸ்பத்திரி ஆண் கிளீனேர்ஸ்)
★ குவைத்: (மெயின்ரனன்ஸ் கிளீனேர்ஸ்)
★ குவைத்: (100 கிலோ அரிசி மூட்டை தூக்கக் கூடிய லேபறேஸ்)
★ குவைத்: (றெயிலர் றைவேஸ் போக் லிப்ற் றைவேஸ்)
★ துபாய்: (எக்கவுண்டன்ஸ், றைவேஸ்/ஓரோமெக்கானிக், சேல்ஸ்மென், ஸ்ரெனோ கிருபர், ஸ்ரோர் கீப்பேஸ், மெக்கானிக்ஸ், சிவில் இஞ்ஜினியேஸ், சேவியேஸ், ஹெவி அன் லைற் வெயிக்கிள் றைவேஸ், காப்பென்ரேஸ், மேசன், குக் அன் சீப்குக்
★ நோத்யெமன்: (அக்கிரிகல்சர் லேபறேஸ்
★ சவுதி அரேபியா: (ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)
★ சவுதி அரேபியா: (ஸ்கூல் கிளீனேர்ஸ்)

இவ்விடங்களுக்கு வருமான ஒழுங்குகள்பெற விரும்புவோர் சகல ஆவணங்களுடனும் நேரில் வரவும்.

பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேசல்** ஏஜென்சி

125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
பி கு.
(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1376)

அணு ஆயுத எதிர் பாதுகாப்புக்கு———

# தடை விதிப்பது பற்றி அமெரிக்கா பேசாது

வாஷிங்டன், ஒக். 6

**"சோவியத்யூனியனுடன் இந்தவாரம் ஐஸ்லந்தில் பேச்சுக்கள் நடத்தும்போது அணு ஆயுதங்களுக்கு எதிரான பாதுகாப்பான முறையொன்றை உருவாக்குவதற்கு தடைபோடும் விஷயம்பற்றி அமெரிக்கா பேசாது என்று அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் ஸுல்ஸ் தெரிவித்தார்.**

போர் உற்பத்தி சமநிலையில் பாதுகாப்பிற்கு சற்று கூடுதல் அழுத்தம் கொடுத்தால் மேலும் உறுதிப்பாட்டுடன் இருக்கமுடியும் என்று அமெரிக்க அதிபர் றேகன் கருதுவதாக திரு. ஜுல்ஸ் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் திரு. றேகன் திரு. கொர்பசேவை சந்திக்கும்போதே அதற்கடுத்த உயர்நிலைச் சந்திப்புகளிலோ பாதுகாப்பான விண்வெளி போராயுத அபிவிருத்தியை நிறுத்திவைக்கும் எதனையும் திரு. றேகன் செய்வார் என்பதை நினைத்துப்பார்க்கமுடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க அணு ஆயுத சோதனைத் தடைக்கு அமெரிக்காவை இணங்கும்படி வற்புறுத்துவதே 'ரெக்ஸ'விக்' உச்சிமாநாட்டில் சோவியத் யூனியனின் முக்கிய பணியாக இருக்கும் என்று சோவியத் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ)




விசுவமடுவுக்குப் போயிருந்தேன். ஸ்ரீமாவோ காலத்தில் இருந்த செழிப்பு இல்லை வாய்க்கால் திட்டத்தில் அரைவாசிப்பேரைக் காணவில்லை. கிழக்கே கிராம விஸ்தரிப்புத்திட்டம் பழையபடி காடாகின்றது. இராணுவக் கெடுபிடியால் பிரமந்தன் குளத்திலும் மக்கள் தொகையில் பெரும்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

''வெளிக்கிடு விசுவமடுவுக்கு'' என வந்தோரில் 10% சவூதியில்; இன்னொரு பத்துவீதம் ஜேர்மனியில்! டென்மார்கிலும் கனடாவிலும் 5%. இந்தியாவிலும் பலர் அகதிகளாக இருக்கின்றார்கள். மனைவி இங்கு! கணவன் ஜேர்மனியில் அகதி குடும்பத்துக்குக் காவல் வயது வந்த மாமா! எமது இனம் எங்கே எப்படிப் போகின்றது?!

—பாணபத்திரன்

## சித்ரூபானந்தா உரை

நெல்லியடி, திங்கள்

ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு பருத்தித்துறை சேவாச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை வேளையில் இம் மாதம் தொடக்கம் சுவாமி சித்ரூபானந்தாவின் உரைகள் நடைபெறும்.

ஈராக்மீது———

## பீரங்கித் தாக்குதல் நடத்தியதாக ஈரான் அறிவித்துள்ளது

தெஹ்ஹரான், ஒக் 6

ஈராக்கின் டஸ்ராவைச்சுற்றியுள்ள தொழிற்சாலைப் பகுதிகளில் பீரங்கித் தாக்குதலைத் தொடக்கியுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.

நேற்று ஈரானின் சிவிலியன் பகுதிகளை ஈராக் தாக்கியதற்குப் பதிலடியாக இந்தப் பீரங்கித் தாக்குதல் நடைபெறுகின்றது என்று ஈரானியர்கள் தெரிவித்துள்ளனர்.

தெற்கு ஈரானிலுள்ள தொழிற்சாலைகளை தமது விமானங்கள் தாக்கியதாக ஏற்கனவே ஈராக் அறிவித்திருந்தது.

லெபனன் — பாலஸ்தீனிய தலைவர்கள்

# சண்டை நிறுத்த ஒப்பந்தம்

டமஸ்கஸ், ஒக். 6

தென்லெபனனில் மராட்டீஸியா அகதிகள் முகாமில் சண்டையைநிறுத்திக்கொள்வதென லெபனன் தலைவர்களும் பாலஸ்தீனிய தலைவர்களும் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

ஸியா முஸ்லிம் அமல் இயக்கம் மற்றும் பாலஸ்தீனிய தேசிய மீட்பு முன்னணியின் அதிகாரிகளுடன் சேர்ந்து சிரியாவின் கண்காணிப்பாளர்கள் இந்த யுத்தநிறுத்தத்தை மேற்பார்வையிடுவார்கள்.

இருதரப்பினருக்குமிடையே பேச்சுக்கள் நடந்தபின்னர் டமஸ்ஸில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையொன்றில் இது பற்றி தெரிவிக்கப்பட்டது.

இன்றிலிருந்து அமுலுக்கு வரும் இந்த உடன்படிக்கை பாலஸ்தீனிய அகதிமுகாமிற்கு உதவிப்பொருட்கள் கிடைப்பதற்கும் அனுமதிக்கும்.

இதற்கு லெபனனில் சிரியா பார்வையாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவது இதுவே முதல்தடவை. (ஒ)

தென்னுபிரிக்காவுக்கு எதிரான தடைகள்:

## ஸிம்பாப்வே — ஸாம்பியா வர்த்தகத்திற்கு

# இந்தியா உதவத் தயார்

புதுடில்லி, ஒக் 6

தென்னுபிரிக்காவுக்கு எதிராக கடும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டால் ஸிம்பாப்வேயும்ஸாம்பியவும் தொடர்ந்து வாத்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு போக்குவரத்து வசதிகளைச் செய்துகொடுக்க இந்தியா முன்வந்துள்ளது.

இந்துசமுத்திரத்திலுள்ள இரண்டு துறைமுகங்களில் இருந்து பொருட்களை அனுப்பிவைப்பதற்கு வசதியாக இரு நாடுகளிலுமுள்ள ரெயில் போக்குவரத்துப் பாதைகளை புனரமைக்க இந்திய அரசாங்க அமைப்பு ஒன்று உத்தேசித்துள்ளது.

தென்னுபிரிக்காவிற்கு அயலில் உள்ள ஐந்து ஆபிரிக்க நடுகளுக்கு ரெயில் போக்குவரத்துச்சேவைகளை சீரமைக்க ஏழு கோடி ஐம்பது லட்சம் டொலர் தேவைப்படுகிறது என்று பி. ரி. ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (ஒ)

## உலகச் செய்திகள்

## பாலங்கள் திருத்தவேலை

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த ஜுன் மாதம் இடம்பெற்ற இராணுவம் - போராளிகள் யுத்தத்தைத் தொடர்ந்து குண்டுவைத்து தகர்க்கப்பட்ட பாலங்கள் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது

பரந்தன் கிளிநொச்சி வீதியிலுள்ள கண்டி வீதிப்பாலம் பரந்தன் ஆனையிறவிற்கு இடையில் அமைந்துள்ள பாலம், பரந்தன் முல்லைத்தீவு வீதியிலுள்ள பாலம் ஆகியனவே திருத்தம் செய்செய்யப்படுகிறது.

கண்டி வீதியிலுள்ள கரடிப்போக்கு பிரதான பாலம் தொடர்ந்தும் சேதமான நிலையிலே உள்ளது குறிப்பிடத்தக்கது.


## பிரயாண ஒழுங்குகள்

★ **லிபியா:** ஒயில் கொம்பனி வேக்கேஸ்

★ **குவைத்:** ஆஸ்பத்திரி கிளீனேஸ்-ஆண், மெயின்ரனன்ஸ் கிளீனேஸ், ஆஸ்பத்திரி பெண் கிளீனேஸ், கவுஸ் மெயிட்ஸ், 100 கிலோ அரிசி மூட்டை தூக்கக்கூடிய லேபறேஸ், றெயிலர் றைவேஸ், போக்லிப்ற் றைவேஸ்,

★ **துபாய்:** எக்கவுண்டன்ஸ், றைவேஸ்/ஒரோமெக்கானிக், சேல்ஸ்மென், ஸ்ரெனோகிருபர், ஸ்ரோர் கீப்பேஸ், மெக்கானிக்ஸ், சிவில்இஞ்ஜினியேஸ், சேவியேஸ், ஹெவி and லைற்வெயிக்கிள் றைவேஸ், காப்பென்ரேஸ், மேசன், குக், சீப் குக்.

★ **நோத் யேமன்:** அக்கிரிகல்சர் லேபறேஸ்.

★ **சவுதி அரேபியா:** ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்.

★ **சவுதி அரேபியா:** ஸ்கூல்கிளீனேஸ்.

மேற்குறிப்பிட்ட இடங்கட்கு வருமான ஒழுங்குகள் பெற விரும்புவோர் உடனடியாக சகல ஆவணங்களுடன் எங்களிடம் நேரில் வரவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**

பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 1377]


இலங்கை நீதி நிர்வாகத்துறை--------------

# உரிமைகளைப் பேணிக்காக்கும் அதிகாரமில்லாத அமைப்பாகும்

## மு. சிவசிதம்பரம் கருத்து

சென்னை, ஒக். 6

"இலங்கையின் நீதி நிர்வாகததுறை அடிப்படை உரிமைகளைப் பேணிக்காக்கும் அதிகாரம் இல்லாத அமைப்பாக இருந்துவருகிறது" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு. சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நடைபெற்ற அனைத்திந்திய சட்டக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே திரு சிவசிதம்பரம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், இலங்கை அரசியல் அமைப்பின்படி அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் இயங்கும் ஓர் அரசு இயந்திரமாகவே நீதிமன்றங்கள் செயல்படுகின்றன என்றும் தெற்காசிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட 'சார்க்' என்ற கூட்டமைப்பினை வரவேற்பதாகவும் கூறினார்.

நாளாவட்டத்தில் இந்த அமைப்பு வலுப்பெற்று ஐரோப்பிய சமுதாயத்திலுள்ளதைப்போல் இந்த நாடுகளுக்குப் பொருந்தும் மனித உரிமை நீதிமன்றங்கள் அமையும் நாட்களை ஆவலுடன் எதிர்பார்ப்பதாக அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ஒ)

## இரத்ததான வைபவம்

(மாவிட்டபுரம், நிருபர்)

மாவை லயன்ஸ் கழகம் உலக லயன்ஸ்சேவைதினத்தை முன்னிட்டு இரத்ததான வைபவம் ஒன்றை காங்கேசன்துறை ஈஸ்வரி மருத்துவமனையில் நாளை 8ம் திகதி நடாத்த உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை லயன்ஸ்செயலாளர் ராஜு, என், வீரசிங்கம், மருத்துவ திட்ட செயல்பாட்டுத் தலைவர் லயன் க. அருந்தவராசா ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். [வா]

## இராணுவ தேடுதலின்போது வீடு, உடைமைகள் சேதம்

வவனியா, திங்கள்.

வவனியா கோவிற்குளம், வீதியில் தேடுதல் நடத்திய இராணுவத்தினர் வீடொன்றைச் சேதப்படுத்தியுள்ளனர். அத்துடன் அவ்வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்களும் உடைத்துநொறுக்கப்பட்டன.

வவனியா-ஹொரவப்பொத்தானை வீதியில் பிரயாணிகள் பஸ்ஒன்றுக்கு பாதுகாப்பளித்துச்சென்ற இராணுவத்தினர் பாலத்தடியில் தமது வாகனத்தை நிறுத்திவிட்டு வீதியை பரிசோதனை செய்தபொழுது

(7-ம் பக்கம் பார்க்க

### மணிவாக்கு

பெரியதொரு காட்டை எரிப்பதற்கு சிறியதொரு நெருப்புப்பொறி போதுமானதல்லவா?

— பழமொழி

## நமது நோக்கு

# குழந்தைகள் நாட்டின் செல்வம்

'தக்கதசமதி தாயொடு தான்படும் துக்கசாகரத் துயரிடைப் பிழைத்தும்' என்று கருவிலிருந்து பிரசவமாகும் குழந்தை படும் துன்பங்களை படம்போடுகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

ஒன்பது மாத முடிவில் பிறக்கும் குழந்தைக்கும் அதன் தாய்க்கும் காலனாக இருந்துவந்த பல அபாய நோய்களை இன்றைய மருத்துவம்குணமாக்கிவிடுகிறது. எனவே குடும்பத்திட்டம் என்ற நவீனம் இல்லறத்துக்கு இன்று அவசியமென்ற கருத்து பரவிவரும்போதும், குழந்தை நமது செல்வம் மட்டுமல்ல, நாட்டின் செல்வமென்றும் கருதப்படுகிறது

மக்கட்செல்வம் மனித செல்வமாக பலமடைய குழந்தைகளை எதிர்நோக்கும் பல துன்பங்கள் ஸ்தாபன ரீதியில் முறியடிக்கப் படவேண்டும்.

இந்த உணர்வில் பிறந்த கருத்தே சர்வதேச குழந்தைகள் வாரம். இன்றுடன் முடிவடையும் இவ்வாரம் வருடாவருடம் வெறும் பேச்சிலும் பிரசாரத்திலும் செலவிடப்படுகிறதா?

இந்த வினா கடும்பிடி போல தோன்றினாலும் குழந்தைகள் பாதுகாப்பு சர்வதேசரீதியில் பல சாதனைகள் நிகழ்த்தியபோதும், எங்கள் நாட்டில் இதுவரை எத்தனை குழந்தைகள் கொல்லப்பட்டன, உயிருடன் எரிக்கப்பட்டன என்ற ஆதாரத்தை வெளியிடாதிருப்பது தர்மமாகாது.

குழந்தைகள், பெண்கள் நோயாளிகள் (மருத்துவமனை) வயோதிபர் எந்தச் சண்டையிலும்பாதுகாப்புப் பட்டியலில் இடம்பெறுவது சர்வதேச போர்முறை. இதனை அன்று பங்களாதேஷில், இன்று லெபனானில் ஈராக்-ஈரான் யுத்தத்தில் கடைப்பிடிக்கவில்லையென்ற நியாயம், குழந்தைகள் தமிழினம் என்ற ஒரு காரணத்தால் அழிக்கப்படுவதற்கு போதுமானதா?

''நாட்டின் வடபகுதியில் தனிநாட்டுக்காக உக்கிர போராட்டம் நடைபெறும் போதும், அங்கு குழந்தைகளின் உடல்நலம் நன்கு பேணப்படுகிறது. வடக்கு கிழக்கு பகுதிகளில் குழந்தைகள் நோய் தடுப்பூசித்திட்டமும் வெற்றியளித்திருக்கிறது'' என்று பெருமிதம்படுகிறார் சுகாதாரஅமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து.

இந்த வெற்றியென்ற நாணயத்தின் மறுபக்கமே இன்று நடைபெறும் போரில் உயிரிழக்கும்பச்சை பாலகர்கள்; அதனை அறியாதவர்போல் இவ்வித புகழ்மாலை இன்று நரக உலகம் போல காட்சியளிக்கும் வடக்குகிழக்குப் பகுதிகளுக்குச் சூட்டுவதேன்?

தங்கள் நாட்டில் சிங்கள) இத்தகைய உணர்வு பிறவாதமையாலேயே இன்று தினசரி ஒன்பது குழந்தைகள் வயிற்றோட்டத்துக்குப் பலியாகின்றன என்பது வற்புறுத்தப்படுகிறது.

நாடு ஒன்றானாலும், அதில் வாழும் சமூகங்களின் தினசரி வாழ்க்கைக்கு அடிப்படையான வாழ்க்கை முறை வேறுபட்டிருப்பதையும் அமைச்சர் எடுத்துரைத்த உண்மை விளக்குகிறது.

தமிழ்மக்கள் வாழ்வில் இல்லறம் பெற்றிருக்கும் உயர்ந்த நிலை திருக்குறளில் தெளிவாக விளக்கப்படுகிறது

இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை என்பது இன்று இல்லறத்துக்கு ஏற்பட்டிருக்கும் பயங்கர சவால்கள் மத்தியிலும் உறுதி பெற்றிருக்கிறது. இல்லறப்பண்பை தமிழ் மக்கள் பேணிவருவதால் சிறுபான்மைச் சமூகம் என்ற வடு தொடரும் போதும், தமிழ் மக்களின் வருங்காலம் குழந்தைகள் மேம்பாட்டால் உறுதிப் படுத்தப்படுகிறது.

நாம் என்றும் கேள்விப் படாத பயங்கர நோய்கள் உணவில் போஷாக்கின்மை, சூழலால் ஏற்படும் அபாயம், குடும்பத்தில் நிலவும் வறுமை அறியாமை இவையாவும் இன்றைய குழந்தைகளின் வளர்ச்சிக்குப் பெரும் எதிரிகளாக அணிவகுத்திருக்கின்றன.

சர்வதேசரீதியில் வழங்கப்படும் உதவியும், அறிவியல் வழிகாட்டியும் எமது மக்களுக்கு எவ்வித பாரபட்சமுமின்றி கிடைப்பதற்கு நாம் இன்று போராடும் உரிமைப்போர் வெற்றியளிக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றோம்.

வெற்றியென்றால் ஆயுதப் போரால் பொதுமக்களை அழித்து வெற்றி அடைந்த பக்கம் தாம் இட்டது சட்டமென்று கொக்கரிக்கும் அமைப்பை நாம் கருதவில்லை

நாட்டின் முதன்மைக் குரித்தான மக்கள் சரிநிகர் சமானமாக வாழ்வதற்காகவே இன்றைய தமிழ் இளைஞர் போரில் குதித்திருக்கின்றனர்.

இதனை இவ்வாறு விளங்காது பயங்கரவாதத்தை அடக்கமுயலும் ஆட்சியில் குழந்தைநலம் சிதைவது வியப்பல்ல. வயிற்றோட்டம் மட்டுமல்ல இன்னும் பல அபாயங்கள் நாட்டின் செல்வத்துக்கு அச்சுறுத்தலாக இருப்பது இன்றைய நிலைமை தெளிவுபடுத்துகிறது இதனை மூடிமறைப்பதற்கு எந்த அபிவிருத்தித் திட்டத்தாலும் முடியாதென்பதை மக்கள் அறிவர்.

# தீவுப்பகுதி மக்கள் படும் துயரம்

வேலணையூர் கே.வி.கே. திருலோகமூர்த்தி

வரலாற்றுத் தொன்மையும் பாரம்பரியமும் மிக்க பிரதேசம் தீவுப்பகுதியாகும்.

நீலத் திரை கடலால் சூழப்பட்டு இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட இந்தத் தீவகம் ஏழு தீவுக் கூட்டங்களை உள்ளடக்கியதாகும். மண்டைதீவு, லைடன் தீவென அழைக்கப்படும் வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு எழுவைதீவு, அனலைதீவு ஆகியவையே அத்தீவுக் கூட்டங்கள்.

இத்தீவுக் கூட்டங்களிலே ஊர்காவற்றுறைப் பட்டினம் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் உள்ளடங்குகின்றன.

மோர் கடற்பிரயாணத்தை மேற்கொண்டே தமது ஊர்களுக்கு செல்ல வேண்டும். பாவம் இந்த மக்கள் படுகின்ற துன்பங்கள் சொல்லும் தரமன்று

இதேவேளை நல்லமுறையில் கடற்பிரயாணத்தை மேற்கொள்ள துணிச்சலுடன் போக்குவரத்தை நடத்துகின்ற இளைஞர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது.

அராலித்துறையின் இருமருங்கிலும் கடல்போக்குவரத்தில் தடைகளோ தாமதமோ கிடையாது. இந்தக் கடற்பிராந்தியம் நீர் குறைந்தபகுதியாகும். நடந்து செல்லக்கூடியளவிற்கு நீர் உள்ள பகுதி.

வுக் கட்டுப்பாட்டதிகாரி முதலானோரின் பணி பாராட்டிற்குரியது.

தீவகப் பிரச்னைகளை பத்திரிகைகள் மூலமாக முன்எடுத்துச் செல்லும் பத்திரிகையாளர்களான கே. வி. கே. ஜெயச்சந்திரன், இ. சற்குருநாதன் முதலானோரின் சேவையையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஆகாய விமானத் தாக்குதலும் தீவகத்தை விட்டுவைக்கவில்லை. வரலாற்றுப் புகழ் மிக்க வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மனின் பல லட்சம்ரூபா செலவில் உருவாக்கப்பட்ட தேர் குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி உள்ளது.

அடுத்துவரும் சில நாட்களில் மாரிமழை ஆரம்பமாகிவிடும். அப்போது தீவுப்பகுதியின் போக்கு வரத்து மேலும் பாதிப்படையலாம் என்ற அச்சம் எல்லா மக்கள் மனதிலும் குடிகொண்டுள்ளது.

ஆயிரக் கணக்கான தேங்காய்களை உரிக்காத நிலையில் கடலில் போடுவார்கள். பின்னர் சுற்றிவர கயிற்றினால் கோத்து கட்டிவிட்டு கடலில் இழுத்துக் செல்லும் பரிதாப நிலை. அரிசி, மா மற்றும் உணவுப் பொருட்களை நனைந்து தோய்ந்து கரை சேர்க்கும் பரிதாப நிலை தொடர்ந்து நிலவுமானால் வீரமும் விவேகமும் கொண்ட தீவக மக்கள் பெருந்துன்பத்துக்குள்ளாவார்கள் இதில் இருந்து தீவக மக்கள் விடுபடவேண்டுமானால் கோட்டை முகாம் மூடப்பட வேண்டும், மினி முகாம்களும் மூடப்படவேண்டும்.

தமிழ்பேசும் மக்களை நாளாந்தம் துயர வெள்ளத்தில் மூழ்கடித்துக்கொண்டிருக்கும் இராணுவ, கடற்படையின் அட்டூழியங்கள் தீவுப்பகுதியையும் விட்டுவைக்கவில்லை.

ஊர்காவற்றுறை நகருக்கு அண்மையிலுள்ள காரைநகர் கடற்படையினரின் அட்டூழியத்தால் அங்கிருந்து ஏவப்படும் ஷெல் தாக்குதல், குண்டுத் தாக்குதல் முதலான காரணங்களால் பல அப்பாவிப் பொதுமக்கள் பலியானார்கள். பல கட்டிடங்கள், கடைகள் சேதமாகியது நகரம் சோபை இழந்து காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்தை பெரிதும் பாதித்துள்ள கோட்டையில் இராணுவம் குடி கொண்டதால் தீவகத்தின் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது. ஆம்! தீவுப்பகுதியின் பிரதான வீதியான பண்ணை வீதிப் போக்குவரத்து தடைப்பட்டது.

இந்தப் போக்குவரவுத்தடையால் இங்கு வாழுகின்ற பல்லாயிரக்கணக்கான மக்களின் நாளாந்த வாழ்க்கை சீர்குலைந்தது.

வாரக்கணக்காக தனிமைப் படுத்தப்பட்ட பகுதியாக இந்தத் தீவகம் விளங்கியது. உணவு, மருந்து அனைத்துக்குமே கடும் தட்டுப்பாடு ஏற்படலாயிற்று.

பல ஆண்டுகளுக்கு முன்பு தீவுப்பகுதியின் போக்குவரத்து தேவைகளை நிறைவுசெய்து வந்த அராலித் துறைமுகம் மீண்டும் இயங்கத் தொடங்கியது. சுமார் ஒன்றரை மைல் வரை தூரம் கடலில் பிரயாணம் செய்யவேண்டிய நிலை உருவாகியது.

யாழ்ப்பாணத்தில் இருந்து முதலில் மினி பஸ் பிரயாணம் மேற்கொண்டு அராலிக் கடல் ஆரம்பத்தை அடைய வேண்டும் இதற்கான பிரயாணச் செலவு ஒருவருக்கு மூன்று ரூபா ஐம்பது சதமாகும்.

பின்னர் மோட்டர் பூட்டிய வள்ளங்களில் ஆர்ப்பரிக்கும் அலைகளின் மத்தியில் நனைந்து தோய்ந்து கடற் பிரயாணம் மேற்கொள்ளவேண்டும். இதற்காக ஒருவருக்கு மூன்று ரூபா அறவிடப்படுகிறது

பின்னர் அராலித்துறையில் இருந்து வேண்டிய இடங்களுக்கு செல்ல பஸ் சேவைகள் நடைபெறுகிறது.

அனலைதீவு எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு மக்கள் இந்த ஒரு கடற்பிரயாணங்களால் மட்டும் தமது சொந்த இடம் சென்றடைந்துவிட முடியாது. அவர்கள் மற்று

துறைமுகக் கரையில் பெரிய அளவிலான தங்குமடம் ஒன்று இந்த இளைஞர்கள்முயற்சியால் அமைக்கப்பட்டுள்ளது

தீவகத்தின் நலனில் அக்கறை கொண்ட டல்தூறை சார்ந்த பெருமக்கள் போக்குவரவு தங்குதடையின்றி நடைபெற ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுக்க அபிவிருத்திச்சபை ஒன்றையும் அமைத்துள்ளனர்.

இப்பணி நிறைவேறப் பாடுபடும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் இரா சிவச்சந்திரன், புவியியல் பீடாதிபதி திரு. பாலச்சந்திரன், முன்னாள் வேலணை உதவி அரசாங்க அதிபரும் வவனியா திட்டமிடல் உதவிப் பணிப்பாளருமான திரு செந்திவடிவேல், திரு வில்வரெத்தினம், உண

# "பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அதிபர்கள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்"

யாழ்ப்பாணம், செவ்.

''பாடசாலையின் அதிபர்கள் அருட்சகோதரிகளாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் பாடசாலைகள் மிகவும் முன்னேற்றமடையும் இன்றைய காலகட்டத்தில் தம்மை அர்ப்பணிக்கின்ற அதிபர்கள் இருந்தால் தான் பாடசாலை விரைவாக வளர்ச்சியுறும்.''

இவ்வாறு யாழ்.சென் பெனடிக்ற் றோ.க. வித்தியாலய பெற்றோர்தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு அ. சிவநாயகமூர்த்தி பேசும் போது தெரிவித்தார்.

மேற்படி வித்தியாலய அதிபர் அருட்செல்வி மேரிலேசா தலைமையில் விழா நடைபெற்றது.

கௌரவவிருந்தினராகஆண்டகை யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை அடிகளும், பிரதம விருந்தினராக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இராசுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக அருட் திரு இ. யோசேப், பி. யேசு

(7ம் பக்கம் பார்க்க)

# அடிக்கடி மின்தடை!

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுக்கோட்டை மேற்குப் பகுதியிலுள்ள குறிப்பிட்ட சில பகுதிகளில் இரவு நேரங்களில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருகிறது.

இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட இப்பகுதி மக்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகின்றனர். இதனையிட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு இப்பகுதி மக்கள் புகார் செய்துள்ளதாகத் தெரியவருகிறது. (ச)

# சக்தியின் பெருமை

## கௌரீதசகம்

மலரகிதன் நித்தியன்நிட் களனேக ஞதமிறை
வயங்கச் சான்றாய்ப்
பலவுலகும் படைத்தருளித் துடைத்திடுமப்
பரந்தானே பரிக்கும் சத்தி
நலமுலவச் சகம்பரிபாலிக்குமாடல் நயப்புமிக்கா
லிரன்றன் பண்ணி
இலகுவிழி கமலமலர் மானுமம்மை
கௌரியையா னிறைஞ்சு கேனே

பொருள்: மலபந்தம் அற்றவரும் என்றும் உள்ளவரும் உருவமில்லாதவரும் தனக்கு உவமை இல்லாது தானே தலைவராய் இருப்பவருமாகிய சிவபெருமான் சாட்சியாய் இருக்க, அம்முதல்வனின் வேறுகாத பராசக்தி, உலகை அருளாட்சி புரிதலில் பெருவிருப்புக் கொண்டவள்; பல்வேறு உலகங்களும் நலம்பெற அவற்றைப்படைத்து அழித்தருளுவாள் அவளே தாமரை மலர் போன்ற ஒளிபெருந்திய கண்களையுடைய உலக மாதாவாகிய கௌரி. அவளை நான் போற்றித்துதிக்கிறேன்.

தமிழில்: தி. சதாசிவஐயர்

பொருள்: மட்டுவில் ஆ. நடராசா

## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda CG 125, விற்பனைக்குண்டு. தொடர்பு: மகேந்திரன் ரேடிங் கம்பனி, இருபாலைச் சந்தி, கோப்பாய். [C 5049]

### தவறிவிட்டது

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்த [எனது] சௌந்தரராஜா மங்கையற்கரசியின் அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலை எதிரிலுள்ள யாழ் கபே யில் கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். [C 5056]

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து





செல்வி
யோ. சசிரேகா

அராலி வடக்கு வட்டுக்கோட்டை செல்வா வீதியைச் சேர்ந்த யோகேந்திரன் - கலா தம்பதிகளின் அருமைப் புதல்வி சசிரேகா இன்று (7-10 1986) தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார் இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், மாமாமார், சித்தப்பாமார், அக்காமார், அண்ணாமார் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (C 5054)

### வெலிங்டன்

10-30, 2-30, 4-30, 6-30
பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த
Space Hunter
(Adults only)
Sex-Action-Thrill

### லிடோ

தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30
பிரபு – நளினி
நடித்த
3-வது வெற்றி வாரம்
புதிய வெளியீடு
கனி
நியாயம்


# படையினர் துப்பாக்கி சூட்டுக்கு இளைஞர் பலி

மாவிட்டபுரம், திங்கள் பலாலிக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற 15 வயது இளைஞர் ஒருவர் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இறந்ததாக பலாலி பிரஜைகள் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த 30ம் திகதி இயந்திர மற்ற கட்டுமரத்தில் கடலில் சென்ற பாலசிங்கம் விஜயமனோகன் என்னும் இந்த இளைஞர் சுமார் 1½ மைல் தொலைவில் வலைவிரித்துக் கொண்டிருந்த சமயம் அவ்வழியே வந்த கடற்படையினர் இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தமையால் வயிற்றில் சூட்டுக் காயங்கள் ஏற்பட்டு மரணமானதாக பிரஜைகள் குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது

அதேசமயம் இவருக்கு உதவியாகச்சென்ற தாவீது பத்திநாதன் என்பவர் காயங்களுடன் உயிர்தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், செவ். சாம்பல்தீவில் 25 வயதுடைய இளைஞனொருவர் நேற்றுப்படையினரால் சுட்டுக்கொல்லப் பட்டதாகத் தெரியவருகிறது. இவர் தமது காலைக் கடமைகளில் ஈடுபட்டிருந்தபோதே சுடப்பட்டுள்ளார்.

இதேவேளை இப் பகுதியில் இன்று பெண்களுட்பட சுமார் 40பேர்வரை கைதானதாகவும் இவர்களில் சிலர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது. (ஊ)

## அ.தி.மு.க.---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மட்ட நிர்வாக மாற்றங்கள் சம்பந்தமாக கட்சியின் பொருளாளரான திரு. கே மாதவன் செயற்குழுக் கூட்டத்தின் பின் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் கட்சியில் உள்ள வேறுபாடுகளைக்களைந்து கட்சியை வலுப்படுத்தும்நோக்கத்துடனேயே இம்மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன என்று கூறினர். (வா)


## எமது புதிய வெளியீடுகள்

தேவதாஸ் (PYRAMID ORIGINAL)
நாகேஸ்வரராவ் சாவித்திரி
300 நாள் (PYRAMID OFIGINAL)
ஜெய்கணேஸ், சுமித்திரா. தேங்காய் சீனிவாசன்
MAHAGURU ரஜனிகாந் மீனட்சி சௌத்திரி
(AMITCO ORIGINAL)
DRAGAN DIES HARD (Original)
ARABIAN DANCE (Original)

ஸ்னேக்கர் வீடியோ மன்சில்
இல: 1, மேல்மாடி, திருநெல்வேலி சந்தி.
(C 5045)

## மிது வீடியோ மூவிசாரின் இன்றைய புதிய வெளியீடு

கமலஹாசன், ராதிகா
நடித்த
★ சிப்பிக்குள் முத்து ★
(தரமான பிரதி)
மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.
[A 1442]

வண். மேற்கு காட்டுத்துறை
அருள்மிகு
## அம்பலவாண விக்னேஸ்வரர் கோவில் மகாகும்பாபிஷேக பூர்த்திவிழா

மெய்யடியார்களே!

எல்லாம் வல்ல ஸ்ரீ அம்பலவாண விநாயகர் திருவருளால் நிகழும் அக்ஷய வருடம் புரட்டாதித் திங்கள் 21ஆம் நாள் [07-10-1986] செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மகா கும்பாபிஷேகப் பூர்த்தி விழா நடைபெற இருப்பதால், அடியார்கள் அந் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி விநாயகப் பெருமானின் திருவருட்கடாட்சத்தைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்

நிகழ்ச்சி நிரல்

காலை 10-00 மணி அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும் விசேட பூசையும்
மாலை 6-00மணி விசேட பூசையும், திருஊஞ்சலும்
மாலை 7-00 மணி ஸ்ரீ விநாயகப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் வெளிவீதி வலம் வரும் காட்சி நடைபெறும்.

குறிப்பு: வீதிகளில் அடியார்கள் விநாயகப்பெருமானை வரவேற்று வணங்கி பெருமானின் அருளைப் பெற்றுய்வீர்களாக.

கோவில் அர்ச்சகர்கள்;
பிரம்மஸ்ரீ இ சந்தானகோபால சர்மா,
பிரம்மஸ்ரீ இ. குமாரசாமி சர்மா
இங்ஙனம்
கோவில் முகாமையாளரும், சொந்தக்காரரும்.
காட்டுத்துறை. வண்ணார்பண்ணை. [C 5046]


## உயர் அதிகாரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சனிக்கிழமை மாமடுவ சென்ற பிரயாணிகள் பஸ்ஸுக்குப் பாதுகாப்பளித்துச் சென்ற இராணுவத்தினரே தம்மைத் தாக்கியதாக அந்த உயரதிகாரி தமது புகாரில் தெரிவித்துள்ளார். [மா]

## பணநோட்டுக்கள்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலை அடைந்து நாளும் பொழுதும் சுதந்திர தமிழீழத்துக்கான பயணம் முன்னெடுக்கப் படுகையில் ஸ்ரீலங்கா அரசின் பிடியைச் சகல அம்சங்களிலிருந்தும் நீக்கப்படவேண்டியுள்ளது. அத்துடன் தமிழீழம் சகலவிதமான பரிணாமங்களுடன் மலர்ந்துவருகின்றது என்பதனைச் சர்வதேச ரீதியாக வெளிக்காட்ட வேண்டியுள்ளது

ஸ்ரீலங்கா இனவாத அரசின் நிர்வாக அமைப்பைத் தூக்கியெறிந்து எமது மக்களுக்கான பொருளாதார அமைப்பைக் கையாள்வதற்காக எமது நாட்டுக்கென்று தனித்துவமான பண நோட்டுக்களின் தேவை உணரப்பட்டுள்ளது இதன் பொருட்டுத் தமிழீழத்துக்கான பண நோட்டுக்கள் 1987ம் ஆண்டிலிருந்து வெளிவருவதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதுபற்றிய மேலதிக விபரங்கள் விரைவில் மக்களுக்கு அறிவிக்கப்படும்.'' [மா]

## என்னிடம்---

[1ம் பக்க தொடர்ச்சி]

கிய இலங்கைக் கடற்படையினரின் முகம் நன்றாக என் நினைவில் உள்ளது. அவர்கள் அட்டகாசமாகச் சிரித்து குறும்பு செய்து கொண்டிருந்தனர்.

''அவர்கள் நிராயுதபாணியாக இருந்த என்னைத் தாக்கிய சம்பவத்தை நினைத்தால் இப்போதும் உடம்பு நடுங்குகிறது. என்னிடம் ஆயுதம் ஏதுமில்லையென்று சொல்லிப் பார்த்தேன். ஆனால் அவர்கள் தொடர்ந்துசுட்டார்கள். நான் நீரில் மூழ்கி நீந்திக்கொண்டு வந்தேன். தலையை உயர்த்திப் பார்த்தபோதுநாங்கள் சென்ற படகு தொடர்ந்து துரத்தப் படுவது தெரிந்தது.

ஒரு மணி நேரம் அவர்கள் எமதுபடகைத் துரத்திக் கொண்டுவந்தனர். போராளிகளின் படகு ஒருவிதமாக இந்தியகடல்எல்லைக்குள் வந்துவிட்டது. அப்பகுதியில்பலமீன் பிடிப்படகுகள் காணப்பட்டன. போராளிகள் மூவர் அந்தபடகுகளைச் சென்றடைய கடலில் குதித்து விட்டனர்.

''எனினும் மீண்டும் இலங்கைக் கடற்படையினர் எமது படகைத் துரத்தி வந்து சுட்டனர் குண்டொன்று படகைத் தாக்கியது எனக்கு முன்னால் இருந்தவர் கடலில் குதித்துவிட்டார். நானும் சில விநாடிகளில் கடலில் குதித்தேன். பின்பு நீர் மட்டத்துக்கு மேலே வந்து பார்த்தபோது, என்னிடம் சுரங்கவெடி இருப்பதாக நினைத்தோ என்னவோ கடற்படையினர் என்னைத் தவிர்த்துச் சென்றனர் ஆனால் சிறிது ஒதுக்குப்புறம் சென்று மீண்டும் சுட்டார்கள்.

மீன்பிடிப் படகைப் பிடிக்க நான் மேற்கொண்ட முயற்சி பலிக்கவில்லை அவை தொலைவில் நகர்ந்து சென்றுவிட்டன ஆனால் அவ்வழியால் வந்த வேறு படகுகள் எனக்கு இடம் தந்தன இதற்கிடையில் நான் ஒரு மணித்தியாலமாக நீரில் இருந்தேன்.

ஆனால் என்னுடன் படகில் வந்த மூன்று போராளிகள் கடற்படையினரிடம் அகப்படாது சயனட் விஷத்தை அருந்திவிட்டு கடலில்குதித்து தற்கொலை செய்து கொண்டனர். படகின் ஓட்டுநராகவிருந்த மற்றைய மூவரையும் நான் மீண்டும் வேதாரணியத்தில் கண்டேன்''. [கே]

## இடமாற்றம்

பளை திங்கள்

பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் எழுதுவினைஞராக கடமையாற்றிய திரு. எஸ். சிவசீலன் யாழ் கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார். இவரது இடத்துக்கு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் எழுதுவினைஞராக கடமையாற்றிய திருமதி க பவளராணி இடமாற்றப்பட்டுள்ளார். [வா]

## கும்பாபிஷேக பூர்த்திவிழா

யாழ்ப்பாணம் செவ்

வண். வடமேற்கு காட்டுத்துறை அருள்மிகு அம்பலவாண விக்னேஸ்வரர் கோவில் மக கும்பாபிஷேக பூர்த்தி விழா இன்று நடைபெறவுள்ளது

இன்றையதினம் காலை 10 மணிக்கு அஷ்டோத்திர சத சங்காபிஷேகமும், விசேட பூசையும் மாலை 6 மணிக்கு விசேட பூசையும், திருஊஞ்சல் மாலை 7 மணிக்கு விநாயகப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் வீதிவலம் வரும் காட்சியும் நடைபெறும். (வா)

## மன்னார் மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினர் நடந்தும் ஜீப்வண்டியொன்றிலுமாக முருங்கன் முகாம்நோக்கிரோந்து சென்றுகொண்டிருந்தனர் இசைமலைத்தாழ்வு என்னுமிடத்தால் ரோந்துப் படையினர் அண்மித்த சமயம் எமதுவீரர்கள் கண்ணிவெடியினை வெடிக்கச் செய்தனர். ஜீப்வண்டி அதில் சிக்கிமுற்றாகச் சிதைந்தது. அதில்பிரயாணம்செய்த 4 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். ஏனையஇராணுவத்தினர் எதிர்த்தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடாது பின்வாங்கி முகாமை அடைந்தனர்''. (மா)

## அரச பயங்கர...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இருந்து முல்லைத்தீவு நோக்கி வரும் அப்பாவி மக்களை விரட்டியடிக்கும் அரச பயங்கரவாதம் ஆகியவற்றைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நேற்று கிளிநொச்சியில் நடத்தப்பட்டது.

ஈழவர் முன்னணியினரால் நடத்தப்பட்ட இவ்வூர்வலம் சுதந்திரபுரம், ரெட்பானா ஆகிய இடங்களிலிருந்து ஆரம்பமாகி விசுவமடுவில் முடிவுற்றது.

ஊர்வலத்தில் சுலோகங்கள் எழுப்பப்பட்டதுடன் இறுதியில் பொதுக் கூட்டமொன்றும் நடத்தப்பட்டது ஈழவர் முன்னணி சார்பில் திரு. துரைரட்ணம் உரையாற்றினார்.

## ரமேஷின்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றனர்

இதுசம்பந்தமாக ஈ பி ஆர். எல் எவ். விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''தோழர் ரமேஷ் தொடர்பான பிரச்சினையில் கடைப்பிடிக்கப்பட்ட அணுகு முறையில் ஏற்பட்ட தவறுகளை சுயவிமர்சன அடிப்படையில் ஏற்றுக்கொள்கிறோம் இவ்வடிப்படையில் தோழர் ரமேஷ் விரைவில் விடுதலை செய்யப்படுவார். அவர் தொடர்பான பிரச்சினைகள் ஸ்தாபன ஒழுங்குமுறைக்கூடாக கையாளப்பட்டு ஸ்தாபன எல்லைகளுக்குள் தீர்க்கப் படும் என்பதை எமது மக்களுக்கு அறியத்தருகிறோம்''. (மா)

## சர்வதேச சமாதான ஆண்டில்
# "தபாலதிபர்களின் பணி முக்கியத்துவம்வாய்ந்தது"

யாழ்ப்பாணம், செவ்

"ஒரு தபாலதிபர் தம்முடைய தொழில் மூலம் சகல நாடுகளிலும் வாழும் மக்கள் ஒருவருடனொருவர் தொடர்பு கொள்ள மிகவும் உதவுகிறார். அவரது இந்தப் பணியானது, அவரை இந்த சர்வதேச சமாதான ஆண்டில் முக்கிய பணியாற்றக் கூடியவராக்கியுள்ளது."

இவ்வாறு சர்வதேச சமாதான ஆண்டை' (இவ்வருடம்) முன்னிட்டு சர்வதேச தபாலதிபர்கள் சங்கம்' வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் தலைவர் நிக்கொல மொரெலினல் வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாடுகளின் அபிவிருத்தி மனித தேவைகளின் பூர்த்தி. சூழலின் பாதுகாப்பு போன்றவற்றிற்கு சமாதானம் அவசியமாதலால் இவ்வாண்டை சர்வதேச சமாதான ஆண்டாக ஐ. நா. பிரகடப்படுத்தியுள்ளது.

"சர்வதேச தபாலதிபர்கள் சங்கம்" உலக சமாதானத்துக்காக இன சாதி வேறுபாடின்றி கடமையாற்றுகின்றது.

"ஒரு தபாலதிபர் உலகெங்கிலுள்ள சுமார் 6 லட்சப் தபாலதிபர்களுடன் ஒத்துழைத்து பணியாற்ற வேண்டியிருப்பதால் உலக நாடுகளிடையே பொருளாதார, சமூக தொடர்புகள் பரிமாற்றப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் உணருகின்றார்.

தகவல்களை தொடர்ச்சியாக பரிமாறச் செய்வதன் மூலம் அவர் தனது சமூகத்தின் பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்திக்கு பங்காற்றுவது மட்டுமன்றி ஏனைய பிரஜைகளின் நலன்களை அபிவிருத்திச் செய்வதிலும் அவரைப்பங்கு கொள்ளச்செய்கிறது.

ஒரு தபாலதிபரின் கடமையானது சர்வதேச ரீதியில் அமைந்துள்ள அமைப்பின் மூலம் சர்வதேசமும் வியாபித்துள்ள பாரிய நட்புறவை ஏற்படுத்துகிறது. (ஊ)

## மரணம் எம்மைத் தேடிவரினும் சமயப்பண்பாடு பேணுதல் அவசியம்"

மாவிட்டபுரம், திங்கள்

"எமது வீடுகளைத் தேடி மரணம் வந்து கொண்டிருக்கும் இக்கட்டான கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந் நிலையிலும் எமது சைவத்தமிழ் பண்பாட்டில் இருந்து விலகாது அதனை நாம் பேண வேண்டும். அதற்கு இவ்வாறான எழுச்சி விழாக்கள் மிகவும் அவசியமானவை."

இவ்வாறு ஏழாலை சைவ சமய அபிவிருத்திச் சங்க 64 வது ஆண்டு விழாவில் கலந்து உரையாற்றிய உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கூறினார்.

திரு சி சக்திகிரீவன் தலைமையில் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெற்ற இவ் விழாவை சைவப் பெரியார் திரு மூ. ஞானப்பிரகாசம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இவ் விழாவில் அருள்மொழி அரசி ஸ்ரீமதி வசந்தா வைத்தியநாதன் பேசுகையில் "எமது மத்தியில் எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடு உள்ளது. ஆனால் மரணத்திற்கு மட்டும் தட்டுப்பாடு இல்லாமல் தினமும் பலர் மரணித்துக்கொண்டிருக்கிறார்கள். இந் நிலையிலும் நாம் மனம் தளராது சமயங்கள் காட்டும் தர்மத்தின் வழியில் செயல்பட வேண்டும் தர்மத்தை கடைப்பிடித்தால் நிச்சயம் எமக்கு பலன் கிடைக்கும்." என்றார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் பேசுகையில்:- "சைவ சமய வாழ்வு வாழ கல்வியறிவும் பண்பும், அனுஷ்டானமும் அவசியமானவை. இளம் வயதிலிருந்தே இவற்றைப் பேணி வாழ்ந்தால் எமது வாழ்வு சிறந்த வாழ்வாக மிளிர முடியும்" என்றார்.

யாழ். பல்கலைக்கழக நூலகர் திரு. சி முருகவேள் பேசுகையில்:- சைவத்தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்படவேண்டுமானால் எமது பண்பாட்டை எடுத்தியம்பும் இவ்வாறான விழாக்களை நடத்துவதுடன் எமது பாரம்பரியப் பண்டுபாடுகளை பேணுவதிலும் நாம் கவனம்எடுக்க வேண்டும்" என்றார்.

மற்றும் சைவப்புலவர் ச. சச்சிதானந்தசிவம் பண்டிதர் மு. கந்தையா உட்பட பலர் உரையாற்றினர்.

இவ் விழாவில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ நா சர்வேஸ்வரக்குருக்கள் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டார். (வா)

## சுற்றுப்போட்டி

யாழ் செவ்.

குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தினரால் ஹென்றி ஜெகநாதன் நினைவு மென்பந்துச் சுற்றுப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

## போட்டி

முல்லைத்தீவு, ஞாயிறு

ஒட்டுசுட்டான் உபவட்டாரத் தமிழ்த்தினப் போட்டிகள் கற்சிலைமடு அ. த. க பாடசாலையில் நடைபெற்றது இப் போட்டிகளுக்கு அதிபர் திரு. ச. தில்லையம்பலம் தலைமை வகித்தார். ஒட்டுசுட்டான் வலய அதிபர் தா சிவசம்புவும் இந் நிகழ்ச்சியில் பங்குபற்றினார். இந் நிகழ்ச்சிகளை திருமதி நா பூபாலசிங்கம் ஆசிரியை ப. செல்வலக்சி ஆகியோர் தொகுத்தளித்தனர்

## ஹட்டன் நகரில் சிங்கள பதிவாளர்

(நமது நிருபர்)

தமிழ் மக்கள் செறிவாக வாழும் ஹட்டன் நகரத்திற்கு பேசசுத் தமிழ்கூட புரியாத சிங்களப் பெண் விவாகப் பதிவாளராக செப்டம்பர்மாத முதலாம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் புரியாத பெண்ணிடம் எப்படி விவாகப் பதிவை செய்வதென்று தமிழ் மக்கள் பெரிதும் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி பெண்கள் அணியின் ஹட்டன் மாவட்ட அமைப்பாளர் இந்தப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது. (நு. நி)

# இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 21 (7-10-86)
கிழமை: செவ்வாய்க்கிழமை
திதி; சதுர்த்தி மு. இ. வரை
நக்ஷத்திரம்: விசாகம் மு. ப. வரை

மேடம்: கட்டிவெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை பசுமையான நினைவுகளும் அலைமோதும். கடமையும் சிறக்க வழிபிறக்கும்.

இடபம்: அற்ப விடயத்திற்கும் ஆத்திரப்படுவீர்கள். சிறு விபத்தும் ஏற்படலாம். கவனம் வேண்டும்

மிதுனம்: அறிஞர்களின் சந்திப்பு கிட்டும் இரக்க சிந்தை மேலிடும் நுட்பமான தொழில் புரிவோர் இன்று போற்றப்படுவர்.

கடகம்: உண்மைவழிநின்று உயர்வடைவீர்கள். பொருளாதாரத்துறையில் நன்மைகிட்டும். வீட்டிலும் சுபகருமம் ஒன்றும் இடம்பெறலாம்.

சிங்கம்: பெரியவர் ஆசி நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும். கால்நடை விருத்திக்குமிடமுண்டு தொழில் துறையில் நன்மையுண்டு.

கன்னி: இதயம் எரிமலையாகும். ஏமாற்றம் தாக்கும் விழிப்புடன் இருக்கவும். சடும்பத்திலும் பூசல்களும் தோன்றலாம்.

துலாம்: அவப்பெயருக்கு இடமுண்டு. சிலருக்கு பிரிவுத்துயர் வாட்டும் பிரயாணத்தைப் பின்போடவும்.

விருச்சிகம்: கலையுலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் கிட்டும். நிதானமான பேச்சு மற்றவர்களின் ஒத்துழைப்பைத் தேடித்தரும். குடும்ப நலனுமுண்டு.

தனுசு: வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். வீண் விவாதங்களைத் தவிர்த்துக்கொள்ளவும் எதிலும் அலட்சியமனப்பான்மைதோன்றும்

மகரம்: தாராளமான ஆசிகள் கிட்டும். பூமிப்பிரச்னைகள் நிவர்த்திகாணும். கடமையிலும் முன்னேற்றம் தென்படும்.

கும்பம்: எதிர்ப்புக்கள் மறைந்து சாதகமான சூழ்நிலை தென்படும். கடமையும் சிறக்கும். பிறபொருள் வரவிற்குமிடமுண்டாம்.

மீனம்: இன்னலின் பின்னலால் வேதனைப்படுவீர்கள். கடமையிலும் சோர்வு தென் தென்படும். இடப்பிரிவும் ஏற்பட இடமுண்டு.

திருமலை வே. ரவீந்திரன்


## பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட் ★ பெல்ஜியம்
★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிற்சலண்ட் ★ டென்மார்க்

எங்கள் பிரதிநிதிகள் உங்களை குறித்த நாட்டில் கொண்டு போய் விடுவார்கள்.

பாஸ்போட், பொண்ட், ரிக்கற் உடன் செய்து தரப்படும்.

**டாக்டர் கே. எஸ். பரஞ்சோதிநாதர்**

பிரசாந்தி வைத்திய நிலையம்
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
(ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை)
உடுவில் கிழக்கு, உடுவில். A 1372



## பிரயாண ஒழுங்குகள்
## குவைத்

| | | |
|---|---|---|
| V. சிவானந்தன் | 6-ம் வட்டாரம் | புங்குடுதீவு |
| M யோகநாதன் | | F 019118 |
| J. D. ராஜசேகரம் | | G 0343328 |
| S. ஐங்கரன் | | H 0366706 |
| P ்யசுதாசன் | | H 0298549 |
| P. பரமேஸ்வரன் | | H0478?4 |
| S தேவராஜன் | | H 0104191 |
| I. A ஜெயசீலன் | | H 000945 |

மேற்குறிப்பிட்டிருக்கும் நபர்கள் உடனடியாக பயணத்தை மேற்கொள்ள வேண்டியதால் தாமதம் இன்றி எமது காரியாலயத்தில் வந்து சந்திக்கவும்.

| | |
|---|---|
| S. மகேந்திரன் | G 0321598 |
| S. பரமேஸ்வரன் | F 178173 |
| S ஈஸ்வரநாதன் | H 0066839 |
| A. மனுவேந்தன் | F 213219 |

இவர்களும் உடன் எம்மை வந்து சந்திக்கவும்.

டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் எமது முகவர் உங்களை அழைத்துச் செல்வார். போகிறவர்கள் உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்,

ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் விசாவுடன பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும.

சிங்கப்பூரில் — பணிப்பெண்கள்
Housemaid, Railway underground general workers இவற்றுக்கான வருமான வய்ப்புக்கள் 21 நாளில் செய்து கொடுக்கப்படும்.

சவுதி, குவைற்-இரினர், ஹறவேஸ்
இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் உடன் செய்து கொடுக்கப்படும்.

**GROUP ATLANTIC**

அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(A 1390)


## யாழ். அபிவிருத்திச் சபை அறிவித்தல்

1986ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி காலை 10 00 மணி வரை யாழ் அபிவிருத்திச் சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப்பகுதி) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டிட திணைக்களம் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைகளங்கள் / கூட்டுத்தாபனங்களின் கீழ்க் காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10 10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர்கள்ன் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப் பணத்தையும் கிரயப்பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ் அபிவிருத்திச் சபை உபஅலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1986ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

| | யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகங்கள் | வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்ட (தொகை தகைமை) | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|---|
| 1. | தெல்லிப்பளை | பஸ்நிலையம் அமைத்தல் | 40,000-/ | 50/- | 25/- |
| 2. | மல்லாகம் | உப அலுவலகக் கட்டிடம் | 100 000/- | 100/- | 50/- |
| 3. | கோப்பாய் | உப அலுவலகக் கட்டிடம் | 110 000/- | 100/- | 5 /- |
| 4. | அச்சுவேலி | சந்தைக் கட்டிடம் | 400 000/- | 250/- | 125/- |
| 5. | நல்லூர் | உபஅலுவலகம் 2ஆம் கட்டம் | 75 000/- | 100/- | 50/- |
| 6. | காரைநகர் வடக்கு | உபஅலுவலகக்கட்டிடம் | 110,000/- | 100/- | 50/- |
| 7. | அச்சுவேலி | மரக்கறிச்சந்தைக்கட்டிடம் 1-ம் கட்டம் | 40.000/- | 50/- | 25/- |
| 8. | மயிலிட்டி | வீமன்காமம் சந்தைக் கொட்டில் | 50,000/- | 50/- | 25/- |
| 9. | முள்ளிப்பற்று | நூல்நிலையம் | 30,000/- | 50/- | 25/- |

அன்ரன் அல்பிரட்
பிரதிச் செயலாளர் (நிர். ச. வேலை)
யாழ். அபிவிருத்திச்சபை.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
அலுவலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(A 1433)

# நவராத்திரி விழா

### காரைநகர்

யாழ்ப்பாணம், செவ்:

வாரிவளவு நல்லியக்கச் சபை நடாத்தும் நவராத்திரி விழா எதிர்வரும் 11ம், 12ம் திகதிகளில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

சனிக்கிழமை நிகழ்ச்சிகளில் காலை சங்கீத, தேவாரப் போட்டிகளும் மாலையில் பட்டிமன்றமும் இடம்பெறும்.

ஞாயிறு நடைபெறும் நிகழ்ச்சிகளில் பேச்சுப் போட்டிகள், நடன, நாடகப் போட்டிகளும் இடம்பெறும். (சி)

### யாழ்ப்பாணம்

பருத்தித்துறை, திங்கள்

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ் மாவட்ட மாணவர் நலன் புரிச் சங்கத்தின் வாணி விழா இம்மாதம் 12ம் திகதி வெகு சிறப்பாக நடைபெறுமென இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ் மாவட்ட மாணவர் நலன்புரிச் சங்கச் செயலாளர் திரு வி. குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

### அராலி

யாழ்ப்பாணம், செவ்:

அராலிவட்டுக்கு நம்பாப்புலம் வைரவர் ஸ்ரீ பத்திரகாளி துர்க்கா கோவிலில் நவராத்திரி பூஜை நேற்று முன்தினம் ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் காலையும், மாலையும் பூஜை வெகு சிறப்பாக நடாத்தப்படவுள்ளது. (வா)

★ ★ ★

யாழ்ப்பாணம், செவ்:

யாழ். அராலி சரஸ்வதி மகா வித்தியால வாணி விழாவும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 11ம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அதிபருமாகிய திரு. அருணாசலம் கலந்து கொள்வார் இறுதியில் பலகலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (சி)

### கோப்பாய்

யாழ்ப்பாணம், செவ்

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் அமைந்துள்ள ஞான வயிரவர் கோவில் நவராத்திரி விழா கடந்த 4ம் திகதி முதல் நடைபெற்றுவருகிறது

இத்தினங்களில் ஆஸ்பத்திரி ஊழியர்களும், வைத்திய அதிகாரிகளும் நடைபெறும்பூஜைகளில் கலந்து கொண்டு பஜனைப் பாடல்களிலும், பக்திப பாடல்களையும் நடாத்துகிறார்கள். (சி)

★ ★ ★

யாழ்ப்பாணம், செவ்.

கோப்பாய் தெற்கு இருபாலை அருள் மிகு கற்பக விநாயகர் கோயிலில் நவராத்திரி விழா பூஜை வழிபாடும் சிறப்புச் சமய நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

இம்மாதம் 12ம் திகதி வரை இடம்பெறும் நவராத்திரி விழாவின் இறுதித் தினத்தன்று சிறுவரின் சமயக் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

### கைதடி

யாழ்ப்பாணம் செவ்:

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையமும், மாதர் அபிவிருத்தி சங்கமும் இணைந்து நடாத்தும் வாணிவிழா இம்மாதம் 12ம் திகதி திருமதி பூமணி சின்னத்துரை தலைமையில் கைதடி கலைவாணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் ''வெள்ளை ருடே'' என்ற நாடகமும், ''எங்களுக்கும் சுதந்திரம் வேண்டும்'' என்ற கவிதை நிகழ்வும் செல்வி அழகா விநாசித்தம்பியின் மாணவிகளின் நடனமும் இடம்பெறும். (சி)

# அமெரிக்கா செல்லும் சைவப்புலவர்



கிளிநொச்சி, திங்.

ஈழத்திலிருந்து சமய மறுமலர்ச்சிக்காக பாடுபட்டு வருபவரும் தென்மராட்சி பக்திநெறிக்கழக தலைவருமான சைவப்புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் வித்துவான் கு. வி. மகாலிங்கம் மலேசியா சிங்கப்பூர், ஜேர்மன், அமெரிக்கா, லண்டன், ஹாவாய் முதலான நாடுகளில் இந்துசமய விரிவுரையாற்றவும சமயப் பிரசாரம் செய்யவும் பயணமானார்.

முன்னாள் 'ஈழநாடு' பத்திரிகையின் அலுவலக நிருபரான புலவர் கு. வி மகாலிங்கம் தலைசிறந்த சமயப் பேச்சாளரும் எழுத்தாளருமாவார்.

தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு சமயம் பரப்ப புறப்பட்ட இவரை பாராட்டி கௌரவிக்கும் வைபவம் சாவகச்சேரி மடத்தடி வைத்தியசாலையில் சாவகச்சேரி மக்கள் ஒன்றிய செயலவைப் பிரதிநிதி டாக்டர் கே வி. கே. திருலோகமூர்த்தி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராககலந்துகொண்ட முன்னாள் கிராமசபைத் தலைவரும் சமாதான நீதிபதியுமான திரு ஏ ஆறுமுகம் பேசுகையில், 'வெளிநாடுசெல்லும் புலவர் கு. வி மகாலிங்கம் கிளிநொச்சியிலும் தென்மராட்சியிலும் இந்து சமய மறுமலர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டார் யாழ்ப்பாணப் பகுதியெங்கும்சென்று சைவசமயம் வளர அயராது உழைத்தார், என்றார்.

ஈழத்து சைவ நல்லுலகு இவராற்றிய தன்னலம் கருதாப்பணிகளால் உயர்வடைந்தது. சைவ ஆலயங்கள் புத்தூக்கமும் புதுபபொலிவும் பெற்றது.

இங்கு இவர் ஆற்றிய பணிகளால் பெருமையடையும் நாம் லண்டன், மலேசியா, அமெரிக்கா முதலான நாடுகளில் இந்துசமயம் பரப்ப புறப்பட்டமையையிட்டு பெருமையையும் பூரிப்புமடைகிறோம் என மேலும்சொன்னார்.

சாவகச்சேரி வடக்கு இணக்க சபைப் பிரதிநிதியும் தாமோதரம்பிள்ளைவீதி விழிப்புக்குழுத் தலைவருமான திரு விஜயகமூர்த்தியும் பேசினார்கள்.

# இளைஞர் கழக சம்மேளன கூட்டம்

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சிமாவட்ட தேசிய இளைஞர்சேவை மன்ற மாவட்ட இளைஞர்சேவை அதிகாரி எஸ். தர்மசீலன் எதிர்வரும் 9ம் திகதி பத்திரிகையாளர் மகாநாடொன்றை பரந்தன் அலுவலகத்தில் கூட்டுகிறார்.

இதேதினம் இளைஞர் கழகங்களின் சம்மேளன அங்குரார்ப்பணக் கூட்டமும் பரந்தன் தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தில் நடைபெறும்.

# இராணுவ முகாமிற்கு அருகிலிருந்த வீடுடைக்கப்பட்டு கொள்ளை

(கிளிநொச்சி நிருபர்)

இராணுவத்திற்கு அஞ்சி தமது வீட்டையும் உடமைகளையும் கைவிட்டு சென்றவரின் வீடு உடைக்கப்பட்டு முப்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் என்னும் இடத்தில் இடம் பெற்றது.

பரவிப்பாஞ்சானில் வசித்து வந்த ஆர். இராசரெத்தினத்தின் வீடு கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு சமீபத்தில் உள்ளது.

கடந்தவாரம் நிலைமை ஓரளவு தணிந்ததும் இராசரெத்தினம் வீட்டிற்கு சென்று பார்வையிட்டபோது வீட்டில் இருந்த பெறுமதிமிக்க மின்சார உபகரணங்கள், உடுபுடவைகள், தையல் இயந்திரம், வெளிநாட்டு படுக்கை விரிப்பு, தளபாடங்கள் உட்பட பெறுமதி வாய்ந்த பொருட்கள் கொள்ளை போயுள்ளது தெரியவந்தது. (எ)

## முதலிடம்பெற்றது

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தால் சென்ற மாதம் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டியில் மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் பாடசாலை 4 முதலிடங்களையும் 4 இரண்டாம் இடங்களையும் பெற்றது.

கடந்த தவணை நடைபெற்ற மானிப்பாய் வட்டார ஆங்கில தினப் போட்டியிலும் இப் பாடசாலை 19 இடங்களில் 11 முதலிடங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. கடனுதவி

பண்டத்தரிப்பு, திங்கள்

பண்டத்தரிப்பின் விவசாயத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பை சேர்ந்த 52 விவசாயிகளுக்கு பண்டத்தரிப்புவை. எம். சி ஏ தலா ஆயிரம் ரூபாவீதம் கடனுதவி வழங்கியுளளது

விதை வெங்காயம் உட்பட தேவையான விதைகளை விவசாயிகள் வாங்குவதற்காக இந்த கடனுதவி வழங்கப்பட்டுவருவதாகவும், இக்கடனை அறுவடை முடிந்தவுடன் விவசாயிகள் மீண்டும் திருப்பி செலுத்த வேண்டும் என்றும் பண்டத்தரிப்பு வை எம். சி ஏ. தலைவர் திரு எஸ் இரத்தினவேல் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்

ஒவ்வொரு வருடமும் இதே போன்ற கடனுதவி இப்பகுதி விவசாயிகளுக்கு கடந்த பல வருட காலமாக வை எம் சி ஏ.யினால் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வா)

## இராணுவம்..,

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணிவெடி வெடித்ததால் இரு இராணுவத்தினர் பலியானது தெரிந்ததே.

இக்கண்ணிவெடிச் சம்பவத்தால் பாலம் பலத்த சேதமடைந்துள்ளது. இப்பாலம் திருத்தும வேலைகள இப்பொழுது நடைபெறுகின்றன இக்கண்ணிவெடிச் சம்பவத்தினால் முதலாம் கட்டைக்கு அப்பால் தொலைபேசி சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் சவரிநாதன் (52-வயது) என்பவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி ஆபத்தானநிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். [மா]

# கல்வித்திணைக்கள ஊ. கூ. கடனுதவி சங்கத் தீர்மானம்

கொழும்பு, திங்.

கல்வித் திணைக்கள ஊழியர்களின் கூட்டுறவு கடனுதவிச் சங்க முகாமைச்சபை உறுப்பினர்களது 33-வது பொதுக் கூட்டம் கொள்ளுப்பிட்டியிலுள்ள தலைமைக்காரியாலயத்தில் திரு. ஆர். எச். சில்வா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு மாவட்டத்திற்கு ஒருவராகப் பல்கலைக்கழகப் புலமைப்பரிசில் திட்டம் அமுல் நடத்துவதுடன் கதிர்காமத்திலும், பண்டாரவளையிலும் ஒய்வு விடுதி கட்டுவதெனவும் புஞ்சிபொறளையில் ஆஸ்பத்திரி ஒன்று நிர்மாணித்து அங்கத்தவர்களுக்குச் சலுகை அடிப்படையில் வைத்திய உதவி அளிப்பதெனவும், ஆயிரம் அங்கத்தவர்கள் உள்ள மாவட்டங்களில் தொடர்பு நிலையங்களை அமைப்பது எனவும், அங்கத்தவர்களுக்கு உற்சவ முற்பணம் 500 ரூபா வழங்குவதெனவும், ஓய்வூதிய பணிக் கொடைத்திட்டம் அமுல் நடாத்தி வருடம் அங்கத்தவர்கள் செலுத்தும் ரூபா 120 ற்குப் பதில் இளைப்பாறும் போது வருடத்துக்கு ரூபா 1000-ம் வீதம் செலுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## அதிபர்கள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நேசன் அடிகளும் கலந்து சிறப்பித்தனர்.

அருட்சகோதரி லைசா தமது தலைமையுரையில், 1909 ம் ஆண்டு கத்தோலிக்க தனியார் பாடசாலையாக ஆரம்பித்த இப்பாடசாலை இன்று கல்வி அதிகாரிகள் போற்றும் பிரபல பாடசாலைகளில் ஒன்றாக வளர்ந்துள்ளது எம் அனைவருக்கும் பெருமை என்றார்.

பாடசாலை மாணவர்களின் நடனங்கள், பாட்டுக்கள், நாடகங்கள் உட்பட 6 கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு சி. சுப்பிரமணியம் நன்றி கூறினார். (ச- வா)


## பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியாவில்

பின்வரும் இடங்களுக்குச் செல்பவர்களுக்கு வேண்டிய பிரயாண ஒழுங்குகள் என்னால் செய்து கொடுக்கப்படும் பாஸ்போட் பிரதி, பிறப்புச்சான்றிதழ் பிரதி (ஆங்கிலம்), தொழில் செய்வதற்கான கடிதப் பிரதி, அண்மையில் எடுத்த ஒரு புகைப்படம் இதற்கான விண்ணப்பத்தை தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

CLEANERS, PIPE FITTERS, WELDERS, ERECTORS, FITTERS, REDGERS, CRANE OPERATORS, DRIVERS L/V, H/V. PAINTERS, FOREMAN, HELPERS, ACCOUNTANT, OFFICE BOYS, JANITORS.

M. Paramasivam,
C/o M. S. GUNARATNAM,
Moona Madu,
Vavuniya

கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

C 5040

## பிரயாண ஒழுங்கு

**குவைத்:** 11-10-86க்கு முன்னர் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ என்னுடன்தொடர்பு கொள்ளவும்.

1. சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர், இயந்தர பராமரிப்பாளர்.
2. முதலாந்தர ஆயந்திர திருத்துநர் (First Class Mechanic)
3. உபகரண தொழில் நுட்பவியலாளர்
4. இயந்திர பொருத்துநர் (Fitter Machinery)
5. பொது பொருத்துநர் (Fitter General)
6. நிர்மாணிப்பாளர் (Fabricator)
7. மின்னியலாளர் (Electricians)
8. மின் மேற்பார்வையாளர் (Electrical Foreman)
9. கணனி இயக்குநர் (Computer Operator)

V. P. பாலா
''திருமங்களம்''
இடைக்காடு,
வளலாய்,
அச்சுவேலி.

V. P. பாலா
C/o N. V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

C-5044

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 7-10-86

## கடற்றொழிலாளர், கடற்படையினரால்
# வெளி இணைப்பு இயந்திரங்களை கடலில் வீசப் பணிக்கப்பட்டனர்

வல்வெட்டித்துறை, திங். பொலிகண்டிப் பகுதிக் கடலில் மீன் பிடித்துக்கொண்டு நின்ற பல கடற்றொழிலாளர்களின் மீன்பிடிப் படகுகளிலிருந்த வெளியிணைப்பு யந்திரங்களைக் கடற்படையினர் கடலில் வீசிய சம்பவமொன்று நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:-

மீன்பிடிப் படகுகளின் அருகில் வந்த கடற்படை ரோந்து விசைப்படகிலிருந்த கடற்படையினர் மீன்பிடிப் படகுகளிலிருந்த பெரும் மீன்களையும் எடுத்துக்கொண்டு, இனிமேல் மீன்பிடிக்க கடலுக்கு வரவேண்டாம் எனக்கடற்றொழிலாளர்களை எச்சரித்ததுடன் சுமார் ஏழு மீன்பிடிப் படகுகளிலிருந்த வெளி இணைப்பு யந்திரங்களையும் அவர்களைக் கொண்டே கழற்றச் சொல்லி கடலில் தூக்கி வீசும்படியும் பணித்தனராம்.

ஆயுத முனையில் தடுத்து நிற்பாட்டப் பட்டிருந்த கடற்றொழிலாளர் வேறுவழி தெரியாது அழுத கண்ணீருடன் யந்திரங்களைக் கழற்றி கடலில் வீசியபின், வலித்துக் கொண்டு கரைக்குப் போகும்படி உத்தரவிடப்பட்டனர்.

கவலை தோய்ந்த முகத்துடன் உயிர் பிழைத்தது போதும் என்ற நிலையில் கடற்றொழிலாளர்கள் கரை வந்து சேர்ந்தனர்.

இச்சம்பவம் பற்றி பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளனர். (கே)

## மீண்டும் ஒலி - ஒளி சேவை

யாழ்ப்பாணம், செவ். மாணவர் கூட்டமைப்புவிடுத்த வேண்டுகோளுக்கிணங்க சிறைச்சாலை போராட்ட நிகழ்வுகள் சம்பந்தமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த ஒலி-ஒளி ஒன்றிய சேவைகள் இன்றுமுதல் மீண்டும் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மின்கம்பத்துடன் மோதிமரணம்

யாழ்ப்பாணம், செவ். கிளிநொச்சி போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் பிரயாணம் மேற்கொண்ட இந்த டிப்போவில் கடமையாற்றும் பஸ் சாரதி ஒருவர் மின்கம்பத்தில்மோதுப்பட்டு கீழே விழுந்து மரணமானார் நல்லூர் முத்திரைச்சந்திக் கண்மையில் உள்ள வளைவில் இவ்விபத்து நிகழ்ந்தது.

கொக்குவில்வாசியான திரு சின்னட்டி- சிங்கராசா (45 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் சிங்கராசா வீடுசெல்வதற்காக பிரயாணம் மேற்கொண்டாரென்றும், பஸ் முத்திரைச்சந்தியிலிருந்து நல்லூர் கோவிலை நோக்கிச் செல்லும் பருத்தித்துறைவீதி வளைவில் திரும்புயபோது விபத்து நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## "1983 வன்செயலிலும், அதற்குப்பின்பும் பாதிக்கப்பட்டு
# வெளிநாடு சென்றவர்களும்
## புனர்வாழ்வுபெறத் தகுதியுடையவர்"

யாழ்ப்பாணம், செவ்.

நாட்டிலே நடைபெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டு வெளிநாடுகளில் தற்போது வாழ்பவர்களும் பாதிப்புற்றோருக்கான புனர்வாழ்வுத் திட்டப் பத்திரங்களைப் பெற்று நிரப்பி அனுப்புவதற்கு உரித்துடையவர்களாவர்.

இலங்கையில் வாழும் உறவினர்கள் இப்பத்திரங்களைப் பெற்று வெளிநாட்டில் வாழும் தமது உறவினர்களுக்கு அனுப்பிவைக்கலாம் அவர்கள் அப்பத்திரங்களை நிரப்பி 'புனர்வாழ்வுத் திட்ட உதவிப் பணிப்பாளருக்கு' நேரடியாக அனுப்பிவைக்க முடியும்.

1983 ஜூலை வன்செயலிலும் அதன் பின்பும் நாட்டில் நடைபெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களது விபரங்களையும், மதிப்பீடுகளையும் திரட்டும் நோக்குடன் புனர்வாழ்வுத் திட்ட அமைச்சு பாதிப்புற்றோருக்கான விபரங்களைத் திரட்டும் பத்திரங்களை யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்சமயம் விநியோகித்து வருகிறது.

சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இப்பத்திரங்களைப் பெறமுடியும்.

இப்பத்திரங்களைப் பெறுபவர்கள் இம்மாதம் 10ம் திகதிக்கு முன்பாக அவற்றை நிரப்பித் தமது கிராமசேவையாளரிடம் கையளிக்கவேண்டும் இரண்டு பத்திரங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும். அவை இரண்டிலும் கிராமசேவையாளர் ஒப்பமிடுவார். அவற்றில் ஒன்றைப் பாதிக்கப்பட்டவர் வைத்திருக்கவேண்டுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களால் பூர்த்தியாக்கப்பட்ட பத்திரங்கள் யாவும் இம்மாதம் 31ம் திகதி யாழ். செயலகத்தில் தரம் பிரிக்கப்பட்டு புனர்வாழ்வுத் திட்ட அமைச்சிடம் கையளிக்கப்படும்.

இதுவரை யாழ் மாவட்டத்தில் எழுபத்தையாயிரம் 'அ' படிவங்களும், ஐயாயிரம் 'ஆ' படிவங்களும் விநியோகிக்கப் பட்டுள்ளன.

காயமடைந்தோர், ஊனமுற்றோர், பாதிக்கப்பட்டவர்களில் தங்கியிருப்பவர்கள், பாதிக்கப்பட்ட அசைவற்ற சொத்துக்கள், பாதிக்கப்பட்ட அசைவுள்ள சொத்துக்கள், கால்நடை இழப்புகள், வாகனங்கள் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள், தொழில்களுக்கான உபகரணங்களை இழந்தவர்கள் என்போர் படிவம் 'அ' வில் நிரப்ப வேண்டும்.

இறந்தோர், காணமற்போனோரின் குடும்பங்கள், இறந்தவர் அல்லது காணமற் போனவரில் தங்கியிருப்பவர்கள். பெற்றோரை இழந்த பிள்ளைகள். இறந்தோர், காணமற்போனோரின் அசைவுள்ள சொத்துக்கள், அசையாத சொத்துக்கள் என்பன படிவம் 'ஆ'வில் நிரப்பப்பட வேண்டும.

'இ' படிவத்தில் பாதிப்புற்ற சமய வழிபாட்டுத் தலங்களுக்காக விண்ணப்பிக்கலாம். (ச-ரா)

## இனப்பிரச்னை: காங்கிரஸ் (ஜே) தீர்மானம்

சென்னை ஒக் 6,

"இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்படும் வகையிலும் ஈழ விடுதலை இயக்கத்தினருக்கு திருப்தி அளிக்கும் வகையிலும் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றுகாண சம்பந்தப்பட்ட அனைவரும் முயல வேண்டும்."

இவ்வாறு காங்கிரஸ் (ஜே) கட்சி, இந்திய இலங்கை அரசுகளையும் மற்றும் ஐ நா சபை போன்ற சர்வதேச அமைப்புக்களையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளது

காங்கிரஸ் (ஜே) கட்சியின் தேசிய தலைவர் திரு அர்பஜேசிங் பலா தலைமையில் நடைபெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது

இது சம்பந்தமாக இந்தியக் குடியரசுத்தலைவர் திரு ஸெயில்சிங்கிற்கு விரைவில் அறிக்கை ஒன்று அனுப்பிவைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வா)

## படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான
# சவரிநாதன் நேற்று
## ஆஸ்பத்திரியில் காலமானர்

(வவனியா நிருபர்)

வவனியா - ஹொரவப் பொத்தானை வீதியில் இடம்பெற்ற கண்ணி வெடிச்சம்பவத்தின்போது இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான சவரிநாதன் (52 வயது) என்பவர் நேற்று காலமானர்.

கடந்த வெள்ளிக்கிழமை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிப்படுகாயமடைந்த இவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தது தெரிந்ததே.

அதேசமயம் அன்று நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்ட கதிரவேலு கதிர்காமன் (21 வயது) இளைஞர் பற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்று அவரது தந்தையார் தெரிவிக்கிறார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர் புத்திசுயதீன மற்றவர் என்றும், இவரைத் தாங்கள் கைது செய்யவில்லை என்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனராம்

மேலும் இராணுவத்தினரின் தாக்குதலுக்கிலக்கான வீட்டில் ஏற்பட்டுள்ள சேதம் 50 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் குமாரசாமி
(Power Loom Instructor)

மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரப்பங்குளலேனில் வசிப்பவரும் ஆகிய கே. எஸ் குமாரசாமி 5-10-86 ல் காலமாகிவிட்டார். இவர் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் காலம் சென்ற திரு. திருமதி கந்தையா (கொக்குவில்) அவர்களின் அன்பு மருமகனும் காலம் சென்ற தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் (கொழும்பு) காலம் சென்ற இரத்தின சபாபதி (சிங்கப்பூர்) காலம்சென்ற இராசா (சிங்கப்பூர்) திருமதி சரஸ்வதி பூபாலசிங்கம் (சிங்கப்பூர்) காலம் சென்ற Dr மஹேந்திரகடன் அவர்களின் சகோதரனும் காலம் சென்ற Dr இராமலிங்கத்தின் பெருமகனும் காலம் சென்ற A K ஆறுமுகம்தம்பி திருமதி குழந்தைவேலு, திருமதி குகதாஸ் (சிங்கப்பூர்), செல்வி பரமேஸ்வரி, செல்வி Dr அகிலாண்டேஸ்வரி, திரு கணபதிப்பிள்ளை திருமதி தில்லையம்பலம், செல்வி நவநீதம், திரு விஜயரத்தினம் (U K) அவர்களின் மைத்துனருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-10-86 திங்கட்கிழமை நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திருமதி ப. குமாரசாமி (C-5039)

### திருமதி பிலோமினம்மா டானியல்

கோவில் வீதியைச்சேர்ந்த திருமதி பிலோமினம்மா டானியல் இன்று (6-10-86) காலமானர் இவர் காலஞ்சென்ற எழுத்தாளர் டானியலின் அன்பு மனைவியும காலஞ்சென்ற யக்கோஞானம், பிலுப்பாச்சிஞானம் ஆகியோரின் அன்புமகளும் புரட்சிதாசன், திருமதி ஜனத்தா ஜோர்ஜ் (ஆசிரியை புனிதசம்பத்திரிசியார் கல்லூரி), திருமதி சுரத்தா இராஜறட்னம் (ஆசிரியை ஸ்ரீ கணேச வித்தியாலயம் புங்குடுதீவு), திருமதி சோபியா பாக்கியநாதன், வசந்தன் (யாழ் மத்தியகல்லூரி) தாரகா (யாழ் சுண்டிக்குளி மகளிர்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜோர்ஜ் இராஜறட்ணம் (சவுதி), பாக்கியநாதன், பாமினிபுரட்சிதாசன் ஆகியோரின் மாமியாரும், ரமேஷ், சுரேஷ், காலம்சென்ற ஜனதாசன், துஷ்யந்தன், காயத்திரி ஆகியோரின் அன்புப்பாட்டியும், காலம்சென்றபெனடிற்திரேசம்மா ஸ்ரனிஸ்லால், அமிர்தநாதன், லியோன்தங்கராசா, ஜீவானந்தம் ஆகியோரின் அன்புச்சகோதரியும்ஆவார். அன்னாரின் நல்லடக்கம் இன்று (7-10-86) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் அர்ச் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

76/2, கோவில்வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்தருபவர்
டா. புரட்சிதாஸன்.

(C-5050)

## மரண அறிவித்தல்

### சின்னட்டி சிங்கராசா

கிளிநொச்சியைச் சேர்ந்த சின்னட்டி சிங்கராசா C T B. Driver கிளிநொச்சி டிப்போ 6-10-86 அன்று அகால மரணமானர் அன்னர் காலஞ்சென்ற சின்னட்டி செல்லம்மா அவர்களின் புதல்வனும் தங்கமலையின் அன்புக் கணவரும் பார்த்தீபன், சுபசீனி, ஜெயதீபன், ஜெகதீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அப்புத்துரை, பொன்னுத்துரை ஆகியோரின் சகலனும் நேசம்மா, தங்கம்மா, நீலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், தெய்வேந்திரம், கந்தசாமி, இரத்தினம் மணி, வவா, மலர்மணி (ஆசிரியை) ஆகியோரின் அருமை சகோதரனும், இரத்தினம், இராசு, பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனரும் தம்புவின் மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 7-10-86 செவ்வாய்க்கிழமை இன்று பி. ப. 2 மணியளவில் அம்பகர் வீதி கொக்குவில் கிழக்கு 'சிறி' பவனத்திலிருந்து தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்

தகவல்: க. அப்புத்துரை. (C-5058)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126